யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.
# J/ Hartley College, Point Pedro.

## விடுமுறைக்கால செயலட்டை– 02 -2020 – தரம் 11
## Holiday Worksheet– 02 - 2020 – Grade 11

| புவியியல் | 61 | T | I,II | மூன்று மணித்தியாலம் 3 Hours |
|---|---|---|---|---|

சுட்டெண் Index No

## புவியியல்

பகுதி – I

- இவ்வினாத்தாள் 40 வினாக்களைக்கொண்டது.
- ஒவ்வொரு வினாவுக்கும் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடை எழுதுக.

- 1 – 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை அடைப்புக் குறியினுள்ளே உள்ளவற்றிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக

1. புவியின் மேற்பரப்பின் பரப்பளவு …………………… மில்லியன் சதுர கிலோமீற்றர் ஆகும்.
   (520 / 510 / 530)

2. புவியின் மாறன் மண்டலத்தின் மேல் எல்லை …………………… எனப்படும்
   (மாற்றரிப்பு / படைத்தரிப்பு / இடைத்தரிப்பு)

3. ஆசியாவிற்கு வெளியில் நெற்செய்கை …………………… நாட்டில் நடைபெறுகின்றது.
   (மடகஸ்கார் / மியன்மார் / ஜப்பான்)

4. இலங்கையில் ஏறக்குறைய …………………. கிலோமீற்றர் நீளமான கடற்கரையோரம் காணப்படுகின்றது.
   (1750 / 1760 / 1740)

5. இலங்கையில் சிறு ஏற்றுமதி பயிர்கள் ஆராய்ச்சி நிலையம் …………………. மாவட்டத்தில் அமைவு பெற்றுள்ளது.
   (மாத்தறை / மாத்தளை / காலி)

6. புவி மேற்பரப்பில் …………………. வீதம் நீரினால் மூடப்பட்டு காணப்படுகின்றது.
   (71.8 / 71.2 / 28.2 )

7. இலங்கைக்கு வெளிநாட்டுச் செலாவணியை உழைக்கும் கனிய வகையாக …………………. முக்கியத்துவம் பெறுகின்றது.
   (இல்மனைற் / காரியம் / இரத்தினக்கல்)

8. இலங்கையில் உள்ள நுரைச்சோலை அனல்மின் நிலையம் …………………. மாவட்டத்தில் காணப்படுகின்றது.
   (மன்னார் / புத்தளம் / குருநாகல்)

9. இலங்கையில் …………………. துறைமுகம் அம்பாந்தோட்டையில் அமைந்துள்ளது.
   (மாகம்புர / ஒலுவில / உகன)

10. சமுத்திரப்படுக்கைகளில் புவி நடுக்கங்கள் நிகழும் போது …………………. அனர்த்த நிலைமையொன்று தோற்றம் பெறுகின்றது.
   (சுனாமி / நிலச்சரிவு / புவியதிர்வு)

❖ **11 – 15 வரையுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசித்து அவை சரியாயின் “ச” ஐயும் பிழையாயின் “பி” ஐயும் சுற்றி வட்டம் வரைக.**

11. மலைப்பாங்கான பகுதியில் நிலத்தின் சாய்விற்கு ஏற்ப படிமுறை நெற்செய்கை இடம்பெறுகின்றது. ( ச / பி )
12. உலகின் இடைவெப்பவலய நாடுகளில் பாற்பண்ணைகள் அதிகளவில் பரம்பிக் காணப்படுகின்றன. ( ச / பி )
13. உலகின் மொத்த சனத்தொகையில் 76 வீதத்தினர் ஆசியா மற்றும் ஆபிரிக்க கண்டங்களில் வாழ்கின்றனர். ( ச / பி )
14. இலங்கையின் நகரப்பகுதிகளில் மேம்பாலங்களை அமைப்பதனால் வீதி நெரிசல்கள் அதிகரிக்கின்றன ( ச / பி )
15. சுனாமி அனர்த்தம் மீன்பிடி நடவடிக்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது ( ச / பி )

❖ **16 – 20 வரையுள்ள வினாக்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்களை கொண்டு நிரப்புக.**

16. மலைப்பிரதேசங்களில் அமைந்துள்ள தட்டையான உயர் நிலங்கள் ………………….எனப்படும்.
17. புவியைச்சூழ்ந்து காணப்படும் பல்வேறு வகையான வாயுக்களை உள்ளடக்கிய மெல்லிய படை …………………. ஆகும்.
18. இலங்கையில் மிகக்குறைந்த அளவு நிலப்பரப்பு …………………. மாவட்டத்தில் நெற்பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தப்படுகின்றது.
19. உலகில் வனஜீவராசிகளின் பாதுகாப்பிற்கும், நிலைத்திருப்பிற்கும் …………………. முக்கியத்துவம் பெறுகின்றன.
20. புவிநடுக்கங்களின் தீவிரத்தன்மையை அளவிடும் அலகு …………………. ஆகும்.
21. கஹட்டகக, கொலன்கஹ, போகல போன்ற சுரங்கங்களில் பெறப்படும் கனியம் …………………. ஆகும்.
22. உலகில் அதிகளவு உற்பத்தி செய்யப்படுவதும் நுகரப்படுவதுமான தானியம் …………………. ஆகும்.
23. அமேசன், கொங்கோ மற்றும் சகாரா, அரேபியா, தார், பெரிய அவுஸ்திரேலிய பாலைவனம் போன்றன …………………. காலநிலை வலயத்தில் காணப்படுகின்றன.

❖ **தரப்பட்டுள்ள வரைபினைப் பயன்படுத்தி 21, 22 வினாக்களுக்கு விடை தருக.**

இலங்கை சனத்தொகை வளர்ச்சி வீதத்தின் மாறுபாடுகள் 1871 – 2012



24. இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி 2.8 வீதமாக கூடிக் காணப்படும் ஆண்டு …………………. ஆகும்.

25. இலங்கையில் குறைந்த சனத்தொகை வளர்ச்சி வீதம் 2012இல் …………………. வீதமாக காணப்படுகின்றது.

❖ **26 – 28 வரையுள்ள வினாக்களில் அ, ஆ என இரண்டு நிரல்கள் தரப்பட்டுள்ளன. "அ" நிரலிலுள்ள தகவல்களின் ஒழுங்குக்கேற்ப "ஆ" நிரலிலுள்ள தகவல்கள் ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளமையைக் காட்டும் சரியான விடைக்குரிய இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

26.

| அ<br>**கனியங்கள்** | ஆ<br>**கனியங்களின் அமைவிடம்** |
|---|---|
| 1. இல்மனைற் | A – பலாங்கொடை |
| 2. சிலிக்கா மணல் | B – எலஹர |
| 3. செர்கன் | C – நாத்தாண்டியா |
| | D – புல்மோட்டை |

1. ACD 2. DCA 3. DBA 4. CBD(……..)

27.

| அ<br>**கண்டங்கள்** | ஆ<br>**சனத்தொகை பருமன்** |
|---|---|
| 1. ஆசியா | A – 18% |
| 2. ஆபிரிக்கா | B – 10% |
| 3. ஐரோப்பா | C – 16% |
| | D – 60% |

1. DAC 2. DCA 3. DCB 4. ADC(……..)

28.

| அ<br>**புவியின் பௌதீக அம்சங்கள்** | ஆ<br>**அமைந்துள்ள கண்டம்** |
|---|---|
| 1. நுல்லபார் சமவெளி | A – வட அமெரிக்கா |
| 2. தக்கண மேட்டுநிலம் | B – சீனா |
| 3. றொக்கி மலைத்தொடர் | C – அவுஸ்திரேலியா |
| | D – இந்தியா |

1. ADC 2. CDA 3. CAB 4. CBD(……..)

❖ **29 – 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதனை குறித்து நிற்கும் இலக்கத்தை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

29. தற்போது சேதன உரங்களின் பயன்பாட்டில் கூடிய கவனம் செலுத்தும் நாடு?
1. இந்தியா 2. இலங்கை 3. பிரித்தானியா 4. சீனா
(…..)

30. 2012ம் ஆண்டு கணப்பீட்டின் படி சனத்தொகைப் பரம்பல் குறைவாக காணப்படும் மாகாணம்?
1. மேல்மாகாணம் 2. கிழக்கு மாகாணம் 3. வடமாகாணம் 4. தென்மாகாணம்
(…..)

31. வீதி அபிவிருத்தியின் கீழ் இலங்கையில் அமைக்கப்பட்ட நிலக்கீழ் சுரங்கபாதை காணப்படுவது?
1. கல்கிசை 2. ரம்பொடை 3. தெஹிவளை 4. மொரட்டுவ
(…..)

32. கிராம மட்டத்தில் தொழிலின்றியிருக்கும் தனி நபரின் பொருளாதார சக்தியை மேம்படுத்த ஏற்படுத்தப்பட்ட செயற்றிட்டம்?
 1. கம்திரிய 2. வாழ்வின் எழுச்சி 3. திவிநகும 4. ஜனசவிய
 (…..)

33. பின்வருவனவற்றுள் புவிச்சரிதவியல் ரீதியான இடராக அமைவது?
 1. புவிநடுக்கம் 2. காட்டுத்தீ 3. வரட்சி 4. சூறாவளி
 (…..)

34. இலங்கை அமைவு பெற்றுள்ள புவித்தகடு எது?
 1. யுரேசியன் தகடு 2. இந்து அவுஸ்திரேலிய தகடு
 3. கரீபியன் தகடு 4. நஸ்கா தகடு (…..)

35. இலங்கையில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைவு பெற்றுள்ள இடம்?
 1. கெரவலப்பிட்டிய 2. சப்புகஸ்கந்த 3. புத்தளம் 4. அம்பாந்தோட்டை
 (…..)

36. விசூவியஸ் எரிமலை காணப்படும் நாடு?
 1. இத்தாலி 2. ஐஸ்வாந்து 3. இந்தோனேசியா 4. யாவா
 (…..)

37. இலங்கையில் க.பொ.த உயர்தரத்திற்கு தொழில் நுட்ப பாடம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு
 1. 2010 2. 2011 3. 2012 4. 2013
 (…..)

38. உலகின் மிகப் பெரிய ஏரி எது?
 1. தித்திக்கா ஏரி 2. லடோகா ஏரி 3. சுப்பீரியா ஏரி 4. விக்டோரியா ஏரி
 (…..)

39. இலங்கையில் கல்வியை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஒன்றாக அமைவது
 1. கல்வியியற் கல்லூரிகள் விருத்தி செய்யப்பட்டமை.
 2. நவீன விஞ்ஞான ஆய்வுகூட வசதிகள் விருத்தி செய்யப்பட்டமை.
 3. நவோதய பாடசாலைகளின் விருத்தி.
 4. மேற்கூறிய மூன்று விடைகளும் சரியானவை.
 (…..)

40. தற்போது உலகை அச்சுறுத்திக் கெண்டிருக்கும் கொரோனா (Covid – 19) வைரஸ் தோற்றம் பெற்ற நாடு?
 1. அமெரிக்கா 2. சீனா 3. இத்தாலி 4. ஸ்பெயின்
 (…..)

(40 X 1 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

- **இவ்வினாத்தாள் I, II என்னும் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.**
- **பகுதி – I இலிருந்து வினா கட்டாயமானது இதில் (அ), (ஆ), (இ) ஆகிய மூன்று பகுதிகளுக்கும் விடை எழுதுதல் வேண்டும்.**
- **பகுதி – II இலிருந்து நான்கு வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.**
- **எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.**

## பகுதி – I

01. ஆ. உமக்குத்தரப்பட்டுள்ள 1 : 50000 இடவிளக்கப்படத்தின் பகுதியைப் பரிசீலித்து அதன் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
 i. படப்பிரதேசத்தில் இல 1, 2 இனால் குறித்துக்காட்டப்படும் அம்சங்கள் எவை? (1புள்ளி)
 ii. இப்பகுதியில் பயிரிடப்பட்டுள்ள வர்த்தக பயிர்கள் இரண்டு தருக? (1புள்ளி)
 iii. நாற்பக்கல் Aயில் பொதுசேவைகளை வழங்கும் இரண்டு அரசாங்க நிறுவனங்களைப் பெயரிடுக? (1புள்ளி)

iv. நாற்பக்கல் A இல் காணப்படும் பயிர்வகைகள் இரண்டு தருக? (1புள்ளி)

v. படப்பகுதியில் பிரதான நதி நெடுகிலும் விரிவடைந்து காணப்படும் நிர்வாக எல்லை யாது? (1புள்ளி)

vi. Xஇன் அமைவிடத்திற்கு குறுக்காக விரிவடைந்து செல்லும் நெடுங்கோட்டினைச் சரியாக பெயரிடுக. (1புள்ளி)

vii. படப்பிரதேசத்தின் தென்கிழக்கு மூலையில் காணப்படும் பௌதீக அம்சம் ஒன்று தருக? (1புள்ளி)

viii. படப்பகுதியில் நெற்பயிர்ச்செய்கையின் பரம்பலில் செல்வாக்கு செலுத்தும் பௌதீக காரணி யாது? (1புள்ளி)

ix. தரப்பட்டுள்ள படப்பிரதேசத்திற்கான நேர்கோட்டு அளவுத்திட்டத்தினை வரைக? (2புள்ளி)

ஆ. உமக்குத் தரப்பட்டுள்ள உலக புறவுருவப்படத்தினைக் கவனமாக அவதானித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக?

I – V வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் எதிரே தரப்பட்டுள்ள மூன்று ஆங்கில எழுத்துக்களில் சரியான விடையைக் குறிக்கும் எழுத்தைப் படத்திலிருந்து தெரிவு செய்து எழுதுக.




| | | |
|---|---|---|
| I. | எரிமலையால் உருவான ஐஸ்லாந்து | A, B, C |
| II. | ஐம்பெரும் ஏரிகள் | D, E, F |
| III. | அரேபிய பீடபூமி | G, H, I |
| IV. | பிரதான கோதுமை உற்பத்தி நாடான ரஷ்யா | J, K, L |
| V. | இறப்பர் பயிர்ச்செய்கை அறிமுகமான பிரேசில் | M, N, O |

இ. உமக்குத் தரப்பட்டுள்ள இலங்கைப்படத்தினைக் கவனமாக அவதானித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக?

I தொடக்கம் V வரையுள்ள ஒவ்வொரு வினாவின் எதிரே தரப்பட்டுள்ள மூன்று ஆங்கில எழுத்துக்களில் சரியான விடையைக் குறிக்கும் எழுத்தைப் படத்திலிருந்து தெரிவு செய்து எழுதுக.




| | | |
|---|---|---|
| I. | இறப்பர் பயிரிட புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட வவுனியா மாவட்டம் | A, B, C |
| II. | அரசினால் உருவாக்கப்பட்ட நெல் ஏற்றுமதி கிராமமான பொலன்னறுவை | D, E, F |
| III. | சிலிக்கா மணல் காணப்படும் வல்லிபுரம் | G, H, I |
| IV. | பவளப்பாறைகள் காணப்படும் ஹிக்கடுவ | J, K, L |
| V. | குமண பறவைகள் சரணாலயம் | M, N, O |

## பகுதி – II

02. i. புவித்தொகுதியில் உள்ளடங்கியுள்ள நான்கு பிரதான உப தொகுதிகளின் பெயர்களைக் குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

ii. வினா i இல் குறிப்பிடப்பட்ட உப தொகுதிகளுக்கிடையே காணப்படும் இடைத்தொடர்புகள் மூன்றினைக் குறிப்பிடுக? (3 புள்ளிகள்)

iii. a. மனிதனுக்கு வளிமண்டலத்தினால் கிடைக்கும் நன்மைகள் இரண்டு தருக? (2 புள்ளிகள்)

b. புவி அமைப்பின் படைகள் மூன்றினையும் குறிப்பிட்டு அவற்றிற்கான பண்புகள் ஒவ்வொன்று தருக? (3 புள்ளிகள்)

03. i. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை என்றால் என்ன? (2 புள்ளிகள்)

ii. a. தேயிலை உற்பத்தியில் முன்னிலை வகிக்கின்ற நாடுகள் நான்கு தருக? (2 புள்ளிகள்)

b. தேயிலைச் செடியைக் கண்டுபிடித்தவர்கள் யார்? (1 புள்ளி)

iii. a. தேயிலை உற்பத்திக்கு சாதகமான பௌதீக காரணிகள் இரண்டு தருக? (2 புள்ளிகள்)

b. இலங்கை அரசு தேயிலை உற்பத்தியை விருத்தி செய்வதனால் கிடைக்கும் நன்மைகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

04. i. புவியிலுள்ள இயற்கை வளங்கள் நான்கு தருக? (2 புள்ளிகள்)

ii. a. தோற்றத்தின் அடிப்படையில் பாறைகளின் மூன்று வகைகளும் எவை? (1 புள்ளி)

b. பல்வேறுபட்ட பாறைகளாலும் பெறக்கூடிய பயன்கள் இரண்டு தருக? (2 புள்ளிகள்)

iii. a. அயன மழைக்காடுகளின் சிறப்பியல்புகள் இரண்டு தருக? (2 புள்ளிகள்)

b. காடுகளும் வனஜீவராசிகளும் எதிர்நோக்கும் இரண்டு பிரச்சினைகளை சுருக்கமாக விவரிக்குக? (3 புள்ளிகள்)

05. i. இலங்கையில் அதிகளவு பயன்படுத்தப்படும் வலு சக்தி மூலங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii. a. வலு சக்தியை சிக்கனமாகப் பயன்படுத்துதல் மூலம் நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்பு செய்யும் விதம் இரண்டினைக் குறிப்பிடுக. (1 புள்ளி)

b. இலங்கையின் வலுச்சக்தி பயன்பாட்டில் எழும் பிரச்சினைகள் மூன்று தருக? (2 புள்ளிகள்)

iii. a. இலங்கையின் பிரதான நீர்மூலங்கள் எவை? (2 புள்ளிகள்)

b. நீரின் பயன்பாடுகள் மூன்றினை சுருக்கமாக விவரிக்குக. (3 புள்ளிகள்)

06. i. சனத்தொகை என்றால் என்ன? (2 புள்ளிகள்)

ii. a. சனத்தொகை வளர்ச்சியின் கால கட்டங்கள் இரண்டினையும் தருக? (1 புள்ளி)

b. சனத்தொகை வெடிப்பு என்றால் என்ன? (2 புள்ளிகள்)

iii. a. கொழும்பு மாவட்டத்தில் சனத்தொகை அதிகரிப்பிற்கான காரணங்கள் நான்கு தருக. (2 புள்ளிகள்)

b. இலங்கை சனத்தொகையின் அண்மைக்கால போக்குகள் மூன்று தருக? (3 புள்ளிகள்)

07. i. அபிவிருத்தி என்றால் என்ன? (2 புள்ளிகள்)

ii. a. அபிவிருத்தியை அளவிடும் பழைய குறிகாட்டிகள் இரண்டு தருக? (1 புள்ளி)

b. அபிவிருத்தியை அளவிடும் நவீன குறிகாட்டிகள் நான்கு தருக? (2 புள்ளிகள்)

iii. a. இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் விமான நிலைய அபிவிருத்திகள் இரண்டினைத் தருக (2 புள்ளிகள்)

b. சுகாதார துறையின் முன்னேற்றத்திற்கு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் மூன்று தருக? (3 புள்ளிகள்)

08. i. இயற்கை இடர்கள் என்றால் என்ன? (2 புள்ளிகள்)

ii. a. உயிரியல் ரீதியான அனர்த்தங்கள் இரண்டு தருக (1 புள்ளி)

b. மனித செயற்பாடுகளால் தீவிரப்படுத்தப்படும் இயற்கை அனர்த்தங்கள் நான்கு தருக (2 புள்ளிகள்)

iii. a. சுனாமி அலைகள் தோன்றுவதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் இரண்டு தருக? (2 புள்ளிகள்)

b. சுனாமி அனர்த்தத்தினால் ஏற்படும் பாதிப்புக்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விவரிக்குக (3 புள்ளிகள்)




SCALE : 1:50000